# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110246

1. District : Coimbatore மாவட்டம் PS: V & AC காவல்நிலையம் Year: 2020 ஆண்டு FIR No.: 8/2020 மு.த.அ. எண் Date: 24/10/2020 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a) & 7(A)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Sections பிரிவுகள்: –
   (iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்: –
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : 102 CrPC

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 23.10.2020 நாள் முதல் Date to : 23.10.2020 நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : 0500 hr நேரம் முதல் Time to : 2200 hr. நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2020 Time நேரம் : 1200 hr
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.10.2020 Time நேரம் : 1300 hr

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 25 km South West
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி RTO check post (outgoing) K G Chavadi, Coimbatore District
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Duraisamy குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : P. Pachiappan தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 48 yrs நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : Indian நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் District Inspection cell office. (g) Address : முகவரி District collector's office Coimbatore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்).
   (1) V. Sargo, Motor Vehicle Inspector (NT) (2) M. Arul Assistant (3) R. Kannan office Assistant, RTO check post (outgoing) K G Chavadi, Coimbatore District. (4) S. Saravanan S/o Seduraman No 5. Indira nagar, B.K. Pudur, Coimbatore (Private Individual)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 24/10/2020 [signature] 24/10/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

G. ARUMUGAM
Name: பெயர் Superintendent of police
Rank: நிலை S.P., ..........No. எண் ..........
Coimbatore District

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.10.2020

<u>பணிந்து சமர்பிக்கப்படுகிறது:</u>

**<u>Contents of FIR in Cr.No.8/2020/AC/CB u/s 7(a) and 7(A) of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 and 102 Cr.PC.</u>**

இன்று 24.10.2020 மதியம் 16.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் G.ஆறுமுகம் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.ப.துரைசாமி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோவை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.8/2020/AC/CB u/s 7(a) and 7(A) of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 and 102 Cr.PC, Dated: 24.10.2020 ன்படி எதிரிகள் 1) திருமதி.V.சரோஜா, மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில்நுட்பமல்லாத), 2) திரு.M.அருள், உதவியாளர், 3) திரு.R.கண்ணன், அலுவலக உதவியாளர், போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை), கந்தே கவுண்டன் சாவடி, கோவை மற்றும் 4) திரு.S.சரவணன், த/பெ. சேதுராமன், எண்.5, இந்திரா நகர், B.K.புதூர், குனியமுத்தூர், கோவை ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் ப.துரைசாமி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் / துணை ஆட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. ந.க.எண்.545/2020/ஜ1 நாள். 24.10.2020 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை – கோயம்புத்தூர் மாவட்டம் – கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) – திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது – மேல்நடவடிக்கைக்காக புகார் அளித்தல் – சம்மந்தமாக. கோயம்புத்தூர் மாவட்டம், கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடியில் (வெளிச்செல்கை) பணிபுரியும் அலுவலர்கள் அந்த சோதனை சாவடியை கடந்து செல்லக்கூடிய வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்தும், கிளீனர்களிடமிருந்தும் வாகன வரி வசூல் செய்வதற்காகவும், தற்காலிக உரிமம் வழங்குவதற்காகவும், E-Way Bill மற்றும் Trip Sheet, ஆகியவற்றை சரிபார்த்து அவைகளில் சோதனைச்சாவடி சீல் வைக்கவும், வாகனங்களை தணிக்கை செய்யாமல் இருக்கவும் கையூட்டாக பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்டம், கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) அலுவலகத்தினை 23.10.2020 ஆம் தேதி காலை சுமார் 05.00 மணி அளவில் கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.G.ஆறுமுகம் மற்றும்

காவல் குழுவினர்களுடன் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரங்கள் தெரிய வந்தது. கோவை மாவட்டம், கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில்நுட்பமல்லாத) திருமதி.V.சரோஜா என்பவரும், உதவியாளராக திரு.M.அருள் என்பவரும் அலுவலக உதவியாளராக திரு.R.கண்ணன் என்பவரும் 22.10.2020 ஆம் தேதி இரவு 08.00 மணி முதல் பணியில் இருந்தது தெரியவந்தது. மேற்படி திடீர் தணிக்கையின் போது சோதனைச்சாவடிக்கு எதிர்புறம் கோவை–பாலக்காடு சாலையில், எதிர் எதிர் திசையில் செல்லும் சாலைகளின் நடுவில் அமைக்கப்பட்டிருந்த குடிசையின் முன்பு அலுவலக உதவியாளர் திரு.R.கண்ணன் என்பவர் தனக்கு உதவியாக தனிநபர் ஒருவருடன் நின்று கொண்டு சோதனை சாவடிக்கு முன்பாக உள்ள நான்குவழி சாலையில் சோதனை சாவடியை கடந்து கேரளா நோக்கி செல்லும் வாகனங்களை தடுத்து நிறுத்தி E-Way bill மற்றும் Trip Sheet-ல் சீல் வைக்க செல்லும் வாகன ஓட்டுனர்கள் மற்றும் கிளீனர்களிடம் மாமூலாக பணத்தை எடுத்துச் செல்லும்படி தெரிவித்து, அதன் பின்னர் வாகன ஓட்டுனர்கள், கிளீனர்கள் சோதனை சாவடியில் மாமூல் பணத்தை கொடுத்து E-Way Bill மற்றும் ட்டிரிப் ஷீட்டில் சோதனை சாவடியில் சீல் வைத்து வந்த பின்னர் அவர்களது வாகனத்தை தொடர்ந்து இயக்க அனுமதித்தது தெரியவந்தது. சோதனை சாவடியில் தணிக்கை செய்த போது உதவியாளர் திரு.M.அருள் என்பவர் அமர்ந்திருந்த சோதனைச்சாவடி சீல் வைக்கும் இருக்கைக்கு முன்பு இருந்த மர ரேக்கின்மேல் வைக்கப்பட்டிருந்த அட்டை பாக்சில் பணம் ரூ.15,130/– இருந்தது. அது சம்மந்தமாக உதவியாளர் திரு.M.அருள் என்பவரிடம் விசாரிக்க அவர் சோதனை சாவடிக்கு சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் மாமூலாக கொடுக்கும் பணம் என்று ஒப்பு கொண்டார். ஆதலால் மேற்படி பணம் ரூ.15,130/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் திருமதி.V.சரோஜா, மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் 22.10.2020 ஆம் தேதி இரவு 08.00 மணி முதல் திடீர் தணிக்கைக்கு முன்புவரை சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடமிருந்து மாமூலாக பெற்ற தொகையை பதிவறையில் வைத்திருப்பதாக கூறி அதனை உதவியாளர் திரு.M.அருள் என்பவர் மூலம் பதிவறையிலிருந்து எடுத்து பணம் ரூ.60,000/– ஐ ஆஜர் செய்தார். மேற்படி பணம் ரூ.60,000/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் கணினி அறையில் பிரிண்ட் எடுத்து கொண்டிருந்த தனி நபர் திரு.S.சரவணன் என்பவருக்கு அருகில் போடப்பட்டிருந்த இரும்பு ரேக்கில் வைக்கப்பட்டிருந்த பென் ஸ்டேண்டில் ரூபாய் ரூ.10,000/– இருந்தது. அதனை பற்றி தனிநபர் திரு.S.சரவணன் என்பவரிடம் விசாரித்த போது தகுந்த

முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.10,000/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனைச்சாவடி அலுவலகத்தில் பிரதான ஹாலின் கிழக்குபுறம் வடக்குபார்த்து இருந்த கழிவறையின் தென்புறம் உள்ள ஜன்னலையொட்டி வெளிபுறமாக உள்ள திறந்த வெளி தரையில் பணம் ரூ.6,100/– இருந்தது. மேற்படி பணத்திற்கு தகுந்த முகாந்திரம் இல்லாததால் அந்த பணம் ரூ.6,100/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக உதவியாளர் திரு.R.கண்ணன் என்பவரை விசாரித்த போது அவர் எப்போதும் சோதனைச்சாவடி வழியாக செல்லும் வாகனங்களை நிறுத்தி அதன் ஓட்டுனர் மற்றும் கிளினர்களிடம் ட்டிரிப் ஷீட் மற்றும் E-Way Bill போன்ற ஆவணங்களில் சோதனை சாவடி சீல் வைப்பதற்கு மாமூலாக பணம் கொடுக்க சொல்வதாகவும், மேற்படி மாமூல் பணத்தை அவருக்கு 25 சதவீதமும், உதவியாளர் திரு.M.அருள் என்பவருக்கு 25 சதவீதமும் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.V.சரோஜா என்பவருக்கு 50 சசவீதமும் பணத்தை பங்கிட்டு பிரித்து கொள்வதாகவும் தெரிவித்தார். அதனையே மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.V.சரோஜா மற்றும் உதவியாளர் திரு.M.அருள் ஆகியோரும் தெரிவித்தனர். மேற்படி திடீர் தணிக்கையின் போது சோதனை சாவடிக்கு சீல் வைப்பதற்காக வந்த 1) திரு.P.லெனின், த/பெ. பூஞ்சோலை, 2) திரு.K.முருகேஷ், த/பெ. கருப்பையா, 3) திரு.M.ரமேஷ், த/பெ.முருகேசன், 4) திரு.தீபு S.பாபு, த/பெ. சுரேஷ்பாபு மற்றும் 5) திரு.M.கார்த்திக், த/பெ.முத்துமணி ஆகியோர்களை விசாரித்த போது அவர்கள் தங்களது வாகனத்தில் சோதனை சாவடி அருகில் வந்த போது சோதனை சாவடிக்கு எதிரில் அமைக்கப்பட்டிருந்த ஓலை குடிசைக்கு அருகே நின்று கொண்டிருந்த சோதனை சாவடியை சார்ந்த பணியாளர்கள் தங்களது வாகனங்களை தடுத்து நிறுத்தி தற்காலிக பர்மிட் மற்றும் பில்களில் சீல் வைக்க அறிவுறுத்தியும், அவ்வாறு சீல் வைக்க செல்லும் போது மாமூலாக பணத்தை எடுத்துச் செல்லும்படி தெரிவித்து வந்ததாகவும், அதன்படி வாகன ஓட்டுனர்கள், கிளீனர்கள் சோதனை சாவடியில் மாமூல் பணத்தை கொடுத்து தற்காலிக பர்மிட், E-Way Bill மற்றும் ட்டிரிப் ஷீட் போன்ற ஆவணங்களில் சோதனை சாவடி சீல் பெற்று திரும்பியதாகவும் தெரிவித்தனர். மேலும் சீல் வைக்க சோதனை சாவடிக்கு சென்ற போது அங்கிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.V.சரோஜா மற்றும் உதவியாளர் திரு.M.அருள் ஆகியோர் தங்களிடம் லஞ்சமாக பணம் கொடுத்தால் தான் சீல் வைக்க முடியும் என்று கேட்டதின் பேரில் அவர்களுக்கு மாமூல் பணம் கொடுத்து தற்காலிக பர்மிட் மற்றும் பில்களில் சீல் பெற்று வந்ததாக தெரிவித்தார்கள். மேலும் திரு.S.கோபாலகண்ணன், த/பெ.சுப்பிரமணியன் மற்றும் திரு.K.அழகுமுத்து, த/பெ காளிமுத்து ஆகியோர்களை விசாரித்த போது அவர்கள் ஒவ்வொரு முறையும் மேற்படி சோதனைசாவடியை

கடந்து செல்லும் போது சோதனை சாவடியில் உள்ள போக்குவரத்து அலுவலர்கள் வாகனத்தை நிறுத்தி சீல் வைக்க பணம் கேட்டு பெறுவது வழக்கம் என்றும், அதன் படி 23.10.2020 அன்று சீல் வைக்க வந்ததாகவும் தெரிவித்தார்கள். மேற்படி 7 நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து அவர்களிடமிருந்து ஓட்டுனர் உரிமம், வாகன பதிவு சான்று, வாகன இன்சூரன்ஸ், E-Way bill மற்றும் ட்டிரிப் சீட் ஆகியவற்றின் நகல்களை தனியர்களது சுய சான்றொப்பத்துடன் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து திருமதி.V.சரோஜா, மோட்டார் வாகன ஆய்வாளர், திரு.M.அருள், உதவியாளர், திரு.R.கண்ணன், அலுவலக உதவியாளர் மற்றும் தனிநபர் திரு.S.சரவணன், ஆகியோர்களையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கை குறித்து ஒரு நடவடிக்கையை 23.10.2020 ஆம் தேதி தயார் செய்யப்பட்டு அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.91,230/– மற்றும் ஆவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். இப்புகார் குறித்து உரிய புலன்விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxxx) 24/10/2020 மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர்/ துணை ஆட்சியர், கோயம்புத்தூர். இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு, 2) கைப்பற்றப்பட்ட பணம், 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். Sir, Received a complaint on 24.10.2020 at 16.00 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.8/2020/AC/CB u/s 7(a) and 7(A) of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 and 102 Cr.PC and sent to DVAC, Chennai for necessary order. Sdxxxxx 24/10/2020 (G.Arumugam), Inspector of Police, Vigilance and Anti Corruption, Coimbatore. இதன் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கை குறிப்பு, கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

24/10/2020

(G.ஆறுமுகம்)
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கோவை.